# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.M.நம்பிராஜன்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 28– ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2055, விசுவாவசு வருடம் கார்த்திகை திங்கள் 12–ம் நாள்
IA.No.8/2025
in
O.S.No.261/2020

சந்திரசேகரன் ........ மனுதாரர்/1–ம் பிரதிவாதி

//எதிர்//

செந்தில்ராஜ் .......... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்னர் 03.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராதாகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.ஹரிபிரசாத், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரீசிலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**உத்தரவு**</u>

மனுதாரர்/1–ம் பிரதிவாதி வழக்கறிஞர் ஒருவரை கமிசனராக நியமனம் செய்து மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்படும் கையெழுத்துள்ள 11–05–2012 ம் தேதியிட்ட ஒப்பந்தத்திலுள்ள அவரது கையெழுத்தையும் மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் ஒப்புக் கெள்ளப்படாத 09–05–2015 தேதியிட்ட காலக்கெடு நீட்டிப்பு ஆவணத்திலுள்ள மனுதாரரின் கையெழுத்து ஆவணத்தை சென்னை தடய அறிவியல்துறை இயக்குநர் அவர்கள் வசம் ஒப்புவித்து கையெழுத்துக்களை பரிசோதனை செய்து கையெழுத்து நிபுணரின் கருத்துரையை பெற்று அறிக்கை சமர்ப்பித்து கையெழுத்து நிபுணர் சாட்சியமளிக்க உத்திரவிடக் கேட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 10(A) மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர் / 1–ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

**2.1)** மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி, தாவா வாதி மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு முன்பணம் ரூபாய் 47,99,000/-ஐ கொடுத்துள்ளதாகவும் காலக்கெடு மூன்று வருடக் காலம் என்று நிர்ணயம் செய்தும் ஒப்பந்தம் தயார் செய்து வழக்கு தாக்கல்செய்துள்ளார். உண்மையில் கடந்த 11-05-2012ம் தேதியில் மனுதாரர்/1-ம் பிரதிவாதி வாதியிடம் கடனாக ரொக்கம் ரூபாய் 3 லட்சம் பெற்றுக் கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக மனுதாரர்/1-ம் பிரதிவாதியும் அவரது மகன்களும் எதுவும் எழுதப்படாத பத்திர பேப்பர் மற்றும் பச்சை பேப்பர்களில் கையெழுத்திட்டு கொடுத்திருந்தனர். அது தவிர வாதியின் உறவினரான பாலசுப்பிரமணியம் என்பவர் மூலமாக நிரப்பப்படாத இரண்டு காசோலைகளை கொடுத்து ரூபாய் 1 லட்சம் கடன் பெற்றிருந்தார். மேற்படி இரண்டு கடன்களையும் திருப்பி செலுத்தி விட்டு கையெழுத்து போட்டுக் கொடுத்த பேப்பர்களை கேட்ட போது வாதி தனது வீட்டில் எங்கேயோ வைத்து விட்டதாகவும் அதை தேடி எடுத்துக் கொடுப்பதாகவும் சொல்லி விட்டார். அதை நம்பி மனுதாரர்/1-ம் பிரதிவாதி இருந்தார். வாதி தான் கொடுத்த கடன் மற்றும் வட்டி தொகைகளுக்காக மேலும் ரூபாய் 3 லட்சம் கொடுக்க வேண்டுமென்று மனுதாரர்/1-ம் பிரதிவாதியிடம் கேட்டார். அதற்கு மனுதாரர்/1-ம் பிரதிவாதி ஒப்புக் கொள்ளாத காரணத்தால் காலம் முடிந்து போன ஒப்பந்தத்தை வைத்து 09-05-2015 ம் தேதியில் வாதி காலக்கெடு நீட்டிப்பு ஆவணத்தை தயார் செய்து அதில் மனுதாரர்/1-ம் பிரதிவாதியின் கையெழுத்தை போர்ஜரியாக போட்டு கெடு நீட்டிப்பு ஆவணத்தை உருவாக்கி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காலக்கெடு நீட்டிப்பு ஆவணத்திலுள்ளது மனுதாரர்/1-ம் பிரதிவாதியினுடைய கையெழுத்து அல்ல. கடனுக்காக மனுதாரர்/1-ம் பிரதிவாதி போட்டுக் கொடுத்த கையெழுத்தை வைத்து வாதி மனுதாரர்/1-ம் பிரதிவாதியின் கையெழுத்தை போர்ஜரியாக போட்டு காலக்கெடு நீட்டிப்பு ஆவணம் தயார் செய்துள்ளார். மேற்படி மனுதாரர்/1-ம் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளப்படும் தாவா கிரைய உடன்படிக்கை ஆவணத்திலுள்ள மனுதாரர்/1-ம் பிரதிவாதியின் கையெழுத்துக்களைக் கொண்டு

09–05–2015ந் தேதியிட்ட காலக் கெடு நீட்டிப்பு ஆவணத்தில் உள்ள மனுதாரர்/1–ம் பிரதிவாதியின் போர்ஜரி கையெழுத்துடன் ஒப்பீடுசெய்து கையெழுத்து நிபுணரின் கருத்துரையை பெற்றால்தான் வழக்கின் உண்மை தன்மையை மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் நிரூபிக்க முடியும், அதனால் பல வாய்மொழி சாட்சியங்கள் குறைய வாய்ப்புள்ளது. புதிய வழக்குகள் உருவாகி முரண்பட்ட தீர்ப்புகள் ஏற்படுவதை தவிர்க்க முடியும். மேற்படி அறிவியல் முறைப்படி கையெழுத்தை புலனாய்வு செய்து கையெழுத்து நிபுணரின் கருத்துரை பெற்று அறிக்கை தாக்கல் செய்ய கமிஷனர் நியமனம் செய்ய வேண்டியுள்ளது. இல்லையென்றால் மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு விடும். ஆகவே நீதிமன்றம் வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளப்படும் கையெழுத்துள்ள 11–05–2012ம் தேதியிட்ட ஒப்பந்தத்தில் உள்ள மனுதாரர்/1–ம் பிரதிவாதியின் கையெழுத்தையும் மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் ஒப்புக் கௌ்ளப்படாத 09–05–2015 தேதியிட்ட காலக்கெடு நீட்டிப்பு ஆவணத்திலுள்ள மனுதாரர்/1–ம் பிரதிவாதியின் கையெழுத்து ஆவணத்தை நீதிமன்ற ஆணையர் மூலமாக சென்னை தடய அறிவியல்துறை இயக்குநர் அவர்கள் வசம் ஒப்புவித்து கையெழுத்துக்களை பரிசோதனை செய்து கையெழுத்து நிபுணரின் கருத்துரையை பெற்று அறிக்கை சமர்ப்பித்து கையெழுத்து நிபுணர் சாட்சியமளிக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. எனவே, மனுவை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு இந்த மனு மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:</u>

**3.1)** மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரரின் கையொப்பத்தை தடய அறிவியல் நிபுணர் கருத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டு தவறானதும், தேவையற்றதுமான மனு தாக்கல்செய்துள்ளார், நீதிமன்றத்தின் நடப்பு செயல்முறைகளை தாமதப்படுத்தும் நோக்கத்திற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு ஏற்றுதலை ஆற்றுகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 11.05.2012 அன்று ஏற்படுத்தப்பட்ட கிரைய

ஒப்பந்தம், 09.05.2015 அன்று செய்யப்பட்ட காலநீட்டிப்பு ஆவணம் மேற்சொன்ன இரண்டு ஆவணங்களும் சாட்சிகளின் முன்னிலையில் 1–ம் பிரதிவாதியால் முறையாக நிறைவேற்றப்பட்டவைகளாகும். ஆவணங்கள் ஏற்படுத்திக்கொண்ட போதும் மேற்சொன்ன ஆவணங்களின் நிறைவேற்றம், பரிவர்த்தனை நடைபெற்ற நேரத்திலும் அதற்குப் பிந்தைய பல ஆண்டுகளிலும் ஒருபோதும் மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட –வில்லை. பிரதிவாதிகள் கிரைய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். இவ்வாறு அந்த உடன்படிக்கைகளின் பலன்களைப் பெற்ற பின், இப்போது இந்த மனுவின் மூலம் மனுதாரர்/1–ம் பிரதிவாதி கையெழுத்தை மறுப்பதற்கு முயற்சி செய்வது, முற்றிலும் பின்னடைவு எண்ணத்துடனான செயல் ஆகும். நிபுணர் கருத்து என்பது ஆலோசனைத் துணை மட்டுமே, விவகாரம் குறித்த தீர்மானிப்புச் சான்றாகாது என்பது சட்டத்தில் நிலைபெற்ற கோட்பாடு. State of H.P. vs. Jai Lal & Others [(1999) 7 SCC 280] மற்றும் S. Gopal Reddy vs. State of A.P. [(1996) 4 SCC 596] ஆகிய வழக்குகளில், நிபுணரின் கருத்து தனித்து எந்த ஒரு தரப்பின் உரிமையையும் நிரூபிக்காது; அது பிற செயலாக்கச் சான்றுகளால் ஆதரிக்கப்பட வேண்டும் என இந்திய உயர்நீதிமன்றம் தெளிவாக தீர்ப்பளித்துள்ளது. ஆகவே, மேற்சொன்ன ஆவணங்களை தடயவியல் நிபுணர் ஆய்வுக்கு அனுப்புவதால் எந்த பயனும் உண்டாகாது. மேலும், நிபுணர் ஒப்பீடு மேற்கொள்ள வேண்டுமானால், ஒப்பீடு செய்யப்படும் ஆவணம் சம காலத்தைச் சேர்ந்த ஆவணமாக இருக்க வேண்டும் என்பது சட்டம். உச்ச நீதிமன்றம் Murari Lal vs. State of M.P. [(1980) 1 SCC 704] என்ற வழக்கில், காலநேரம் ஒத்ததாக இல்லாத அல்லது நிரூபிக்கப்படாத ஆவணத்தை ஒப்பீட்டுக்கு பயன்படுத்துவது நிபுணரின் கருத்தை நம்ப முடியாததாக மாற்றும் எனத் தெரிவித்துள்ளது. இவ்வழக்கில், மனுதாரரின் சத்தியப்பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் பதிவு செய்யப்பட்டதும் அல்ல; அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணம் என்றும் நிரூபிக்கப்படவில்லை. எனவே, அத்தகைய ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் எந்த ஒப்பீடும் சட்டரீதியாக பொருட்படுத்தத்தக்கதல்ல. கிரைய ஒப்பந்தமும் கால நீட்டிப்பு ஆவணமும் இரு தரப்பினராலும்

நற்கருத்துடனும் நம்பிக்கையுடனும் செயல்படுத்தப்பட்டவை. 1ம் பிரதிவாதி முழு பரிவர்த்தனைத் தொகையையும் பெற்றதாக ஒப்புக்கொண்டு, கனரா வங்கியில் இருக்கும் அடமானத்தைத் தீர்த்தபின் இறுதி விற்பனைச் சான்றை வழங்குவதாக உறுதியளித்தார். அச்சொல்லுக்கு நம்பிக்கை வைத்து, வழக்குத் தரப்பினரும் பல ஆண்டுகள் அமைதியாகக் காத்திருந்தனர். பிரதிவாதிகள் தங்கள் கடமையை நிறைவேற்றத் தவறியபின் மட்டுமே, மனுதாரர் வழக்கைத் தாக்கல் செய்தார். இந்நிலையில், நீண்ட காலம் கழித்து கையெழுத்து விவாதத்தை முன்வைப்பது தாமதப்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்ட தீய நோக்கமுள்ள முயற்சி மட்டுமே. கையெழுத்தை மறுக்கும் தரப்பினர்மீது அதை நிரூபிக்கும் பொறுப்பு இருப்பது இயல்பான சட்ட நிலை. பிரதிவாதிகள் கையெழுத்து போலியானது அல்லது உருவாக்கப்பட்டது எனக் காட்ட எந்த நம்பத்தகுந்த சான்றையும் வழங்கவில்லை. எந்தவிதமான அடிப்படை உண்மையும் இல்லாமல், வெறும் நிபுணர் கருத்து பெறவேண்டும் என்று கோரும் மனு அனுமதிக்கதக்கதல்ல. ஆகையால் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.

**5. தீர்வு:–**

**5.1)** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர் அசல் வழக்கில் 1–வது பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் இந்த அசல் வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்றுதலை ஆற்றுகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், கடந்த 11.05.2012 அன்று அசல் வழக்கில் வாதிகளும் பிரதிவாதிகளும் தாவாசொத்தைப் பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாகவும் அந்தக் கிரைய ஒப்பந்தப்படி தாவா சொத்துக்கு எதிர்மனுதாரர்/வாதி ரூ.47,99,000/– மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு முன்பணமாக கொடுத்ததாகவும், மேற்படி கிரைய ஒப்பந்தத்திற்கு 3 வருட கால அவகாசம் என்று எழுதப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**5.2)** உண்மையில் மனுதாரரும் அவருடைய மகன்களும்/பிரதிவாதிகள் கடந்த 11.05.2012 அன்று எதிர்மனுதாரரிடம் ரூ.3,00,000/− கடனாக வாங்கியதாகவும், கடனுக்கு ஆதரவாக மனுதாரரும் அவருடைய மகன்களும் எழுதாத பத்திரப் பேப்பரில் பச்சை பேப்பரிலும் கையொப்பம் இட்டுக் கொடுத்ததாகவும், பின்னிட்டு மனுதாரர் எதிர்மனுதாரருக்கு உறவினரான பாலசுப்பிரமணியம் என்பவரிடமும் நிரப்பப்படாத இரண்டு காசோலைகளை கடனுக்கு ஆதரவாக கொடுத்து ரூ.1 லட்சம் கடன் வாங்கியதாகவும், மேற்படி இரண்டு கடன் தொகைகளையும் மனுதாரர் வட்டியுடன் திருப்பிச்செலுத்திவிட்டு மேற்படி ஆவணங்களை திரும்ப கேட்டபோது வாதியானவர் எங்கோ வைத்துவிட்டதாகவும் தேடிப்பார்த்து கொடுப்பதாகவும் சொல்லியதால் மனுதாரர் நம்பி வந்துவிட்டார் என்றும், எதிர்மனுதாரர் தற்போது மேற்படி கடனுக்கு கூடுதலாக ரூ.3 லட்சம் வட்டி கேட்டபோது மனுதாரர் மறுத்துவிட்டார் என்றும், அதற்கு எதிர்மனுதாரர் பொய்யாக மேற்படி ஆவணங்களை பயன்படுத்தி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் வாதிட்டார். மேலும் அவர் வாதிடுகையில், 09.05.2015 அன்று மேற்படி கிரைய ஒப்பந்தத்தை காலநீட்டிப்பு செய்ததாக போர்ஜரியாக மனுதாரர் கையொப்பத்தை எதிர்மனுதாரர் போட்டு அதில் கால நீட்டிப்பை பொய்யாக உருவாக்கியுள்ளார் என்றும், மேற்படி கால நீட்டிப்பில் உள்ள கையொப்பம் மனுதாரருடைய கையொப்பம் அல்ல என்றும், மேற்படி கால நீட்டிப்பு ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை மனுதாரர் எதிர்மனுதாரரோடு ஒப்புக்கொண்டு செய்துகொள்ளப்பட்டதாக சொல்லப்படும் கிரைய உடன்படிக்கையில் உள்ள கையொப்பத்தை கையெழுத்து நிபுணர் கொண்டு ஒப்பிட்டு பார்த்து கருத்துரை வழங்க ஒரு ஆணையரை நியமித்து தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**5.3)** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர் எதிர்மனுதாரரோடு செய்துகொண்ட 11.05.2012 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தையும், 09.05.2015 ல் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த கால நீட்டிப்பு ஆவணத்தையும் மனுதாரர் ஒத்துக்கொண்டுள்ள நிலையில் தற்போது பல

ஆண்டுகள் கழித்து மேற்படி ஆவணத்தை குறித்து தற்போது மனுதாரர் காலநீட்டிப்பு ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என்று பொய்யாக எதிர்வாதம் செய்கிறார். மேலும், வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்துவதற்காகவே தற்போது மனுதாரர் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். கையெழுத்து நிபுணருடைய கருத்துரை இறுதியான சான்றாக கருதமுடியாது, அது அறிவுரையாகதான் ஏற்றுக்கொள்ள முடியும் என்றும், மேலும், சம காலத்தைய ஆவணத்தில் உள்ள கையொப்பங்களை தான் ஒப்பிட்டுப் பார்கக முடியும், இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் இரண்டும் வேறுபட்ட காலங்களை உடைய ஆவணம் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**5.4)** நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் ஆவணங்களையும் மிக கவனமாக பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக 11.05.2012 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்றுதலை ஆற்றுகை பரிகாரம் கோரியுள்ளது தெரிய வந்துள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்தத்திற்கான காலக்கெடு 3 வருடங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள விவரமும் தெரிய வந்துள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்தத்தை 09.05.2015 அன்று மனுதாரரும் எதிர்மனுதாரரும் காலநீட்டிப்பு ஆவணம் மூலம் காலநீட்டிப்பு செய்ததாக எதிர்மனுதாரர் வழக்குரையில் சொல்லியுள்ள விவரம் தெரிய வந்துள்ளது. மனுதாரர் தரப்பில் மேற்படி கால நீட்டிப்பு ஆவணம் போர்ஜரியாக தயார் செய்யப்பட்டு இந்த வழக்கில் தாக்ககல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் உள்ள கையொப்பம் தன்னுடைய கையொப்பம் அல்ல என்றும் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்கள். மனுதாரர் தரப்பில் கிரைய ஒப்பந்தத்தில் உள்ள மனுதாரர்/பிரதிவாதியின் கையொப்பத்தையும் காலநீட்டிப்பு ஆவணத்தில் உள்ள மனுதாரர்/பிரதிவாதியின் கையொப்பமாக சொல்லப்படும் கையொப்பத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும என்று மனுதாரர் கோரியுள்ளார்.

**5.5)** எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கிரைய ஒப்பந்தத்தில் உள்ள தன்னுடைய கையொப்பத்தையும் காலநீட்டிப்பு ஆவணத்தில் உள்ள கையொப்பத்தையும் ஒத்துக்கொண்டபின் மனு தாக்கல்செய்துள்ளதாக தெிவித்துள்ளார். ஆனால் மனுதாரர் அவ்வாறு எதிர்வழக்குரையில் காலநீட்டிப்பு ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்று ஒத்துக்கொள்ள –வில்லை. மேற்படி கையொப்பம் போர்ஜரி என்றுதான் குறிப்பிட்டுளளார்.

**5.6)** எதிர்மனுதாரர் தரப்பில் கையெழுத்து நிபுணருடைய கருத்துரை இறுதியானது அல்ல, அதை அறிவுரையாகதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வாதிட்டாலும், மேற்படி ஆவணங்களில் உள்ள மனுதாரர்/ பிரதிவாதியின் கையொப்பத்தை ஒப்பீடு செய்வதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஏற்படப்போவதில்லை, மேலும், மேற்படி இரு ஆவணங்களும் சம கால ஆவணங்கள் அல்ல என்றும், எனவே அதில் உள்ள மனுதாரர்/பிரதிவாதியின் கையொப்பத்தை ஒப்பிடமுடியாது என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்தாலும் 3 ஆண்டுகள் தான் இடைவெளி உள்ளன. எனவே, இருதரப்பினருக்கு இடையேயான உண்மையான பிரச்சனையை தீர்க்கும் பொருட்டு மேற்படி ஆவணத்தை ஒப்பீடு செய்ய மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்படி ஆவணங்களை ஒப்பீடு செய்ய தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கு ஆணையரை நியமனம் செய்யவும் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டும், மேற்படி ஆவணங்களை ஒப்பீடு செய்ய தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கு ஆணையரை நியமனம் செய்யவும் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 28–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.28 19:40:20 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

**<u>மனுதாரர்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:– இல்லை</u>**

**<u>எதிர்மனுதாரர்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:– இல்லை</u>**

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.28 19:40:28 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

FAIR/DRAFT ORDER
In
IA.No.8/2025
in
OS.No.261/2020
Date: 28.11.2025
IV$^{th}$ ADJ Udt